**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.304/2020**

**வா.சா. – 1– தினேஷ் ஸ்ரீ ராம்**

**நாள். 06.02.2024**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் கூடுதல் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்த பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ எனக்கு எந்த வகையில் வருமானம் கிடைக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2016 ஆம் ஆண்டு வருமான வரி கணக்கு துவக்கினேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள கிரைய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்ட பின்பு வருமான வரி கணக்கு ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். வருமான வரி கணக்கில் சொத்து வாங்கிய விபரம் மற்றும் விற்ற விபரம் பற்றி குறிப்பிடப்பட வேண்டும் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ரூ50 லட்சம் கொடுத்தது பற்றி வருமான வரி கணக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 கிரைய பத்திரம் நானும் எனது சகோதரரும் சேர்ந்து தான் நாகராஜன் மற்றும் சண்முக சுந்தரத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். அந்த சொத்து எனக்கு மட்டும் தானமாக கிடைக்கபெற்ற சொத்து என்றால் சரிதான். அந்த சொத்தில் என் சகோதரருக்கு பங்கு எதுவும் இல்லை. அந்த கிரைய பத்திரத்தில் என் சகோதரனை சேர்க்க வேண்டிய காரணம் என்னவென்றால் DTCP Approval வாங்குவதற்காக இரண்டு பேரும் சேர்ந்து எழுதிக் கொடுக்க வேண்டும் என்று வாங்கியவர் கேட்டதால் அவரிடமும் கையொப்பம் வாங்கினேன். அந்த கிரைய பத்திரத்தின் வாயிலாக எனக்கு பணம் கிடைத்தது என்பதையும் தாவா கிரைய ஒப்பந்தத்தின் போது அந்த பணம் என் கைவசம் இருந்தது என்பதையும் என் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 கிரைய பத்திரம் என் தகப்பனார் முன்னின்று செய்து வைத்தார் என்றால் சரிதான். என் தகப்பனார் சொத்துக்களை அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கடன் தொகை தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ரூ.50 லட்சம் முன் பணமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ரூ.50 லட்சம் கொடுக்கும் அளவிற்கு எனக்கோ, என் தகப்பனாருக்கோ வசதி இல்லை என்றால் சரியல்ல. நானும் எனது சகோதரரும் வாடகை வீட்டில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். சுமார் 20 வருடமாக அந்த வாடகை வீட்டில் தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மற்றும் 7 தவிர என்னிடம் வசதி உள்ளது என்று காண்பிக்க வேறு ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல.

**ஆவணங்கள் உள்ளன. அவற்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் அசையும் மற்றும் அசையா சொத்து என்ன உள்ளது என்று பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.**

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.03.25 17:03:05 +0530

Additional District Judge,

Dindigul.